AMNA

# ஆதி மார்க்க னீதி மொழி

March 2023

இதழ் 20 – மார்ச் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



### மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதிமார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே! ஆதி மார்க்க னீதி அவையின் பிப்ரவரி மாத மின்னணு சஞ்ஞிகையின் இருபதாவது இதழ் 14 அவை, மற்றும் 4 இசை வகுப்பு நிகழ்வுகளுடன் மலர்கிறது.

இதில் சிறப்பாக இடம் பெற்றுள்ள சரவண குமரனின் நாற்பதாவது நாள் ஆன்ம சஞ்சார உரிமைக் காட்சி நிகழ்வின் சில குறியீடுகளாக, நாற்பதாவது நாள் என்றால் என்ன? ஆன்ம சஞ்சாரம் நிகழ்வது எப்படி? என கூறப் பெற்றுள்ளதை மக்கள் பார்த்து பயன் பெற வேண்டும். இந்த ஒரு காரியத்திற்கு அன்றி உலக காரியத்திற்காக நாம் இந்த அவையில் சேரவில்லை என்பதை மக்கள் திட்டவட்டமாக உணர வேண்டும். இந்த அவைக்கு மிகப்பெரும் தூணாக விளங்கிய சரவணகுமரன் என்ற அப்பெருமகன் இன்று நம்மோடு அறிவு வடிவாக விளங்குகிறான் என்பது நினைவு கூறத் தக்கதாக உள்ளது. ஆண்டவர்களின் நோக்கமும் பரிபூரண ஆசீர்பாதமும் எல்லோரும் இந்நிலையை அடைய வேண்டும் என்பதே. இதை நன்மக்கள் அனைவரும் பெற்று உய்ய வேண்டும் என்பதே எம்முடைய நோக்கமும். நன்னெறியாகிய சென்னெறிச்சீர் வளம்மிக்க மெய்வழியின் சிறப்புகளை, நன்மக்கள் பல நிலைகளில் அவரவர் பெற்ற அனுபவங்களை அவை நிகழ்வுகளின் மூலமாக பகிர்ந்து உள்ளனர்.

மேலும் பத்மனாபன் எனும் வாசுதேவ கிருஷ்ணன் அருளிய பகவத் கீதையின் சிறப்பு, அர்ஜுன விபாக யோகத்தில் இருந்து சாங்கிய யோகம் வரை பழனிவேல் அவர்களின் இரண்டாவது மகன் கோபிநாத் மூலம் மிகவும் அழகாக தொகுத்து வழங்கப் பெற்றுள்ளது. சர்வ மதங்களின் அடி நாதமாக சொல்லப் பெற்றுள்ள மறலிகை தீண்டாமையே பகவத்கீதை வெளியாவதற்கான மிக முக்கிய காரணம். எம பயத்தால் கையில் இருந்த காண்டீபத்தை நழுவ விட்ட அர்ஜுனனிடம் மீண்டும் அதை எடுத்துக் கொடுத்து தர்மம் வெல்ல வேண்டும் என பகவான் அருளியதே பகவத் கீதை. அதன் உட்பொருள் ஆதார உயிர் பதிப்பான வேர் மேலும் தலை கீழுமாக நின்று விளங்கும் அத் தெய்வீக மாமரம் எனும் விஸ்வச்சுலா மரத்தின் சிறப்புகள் யாவற்றையும் இனி வரும் காலங்களில் என் மக்கள் அறிந்து பயன் பெறுவதுடன், அதனைப் பெற்ற மக்கள் அதன் சிறப்புகளை எடுத்துச் சொல்வர் என்பதும் நிச்சயம்.

நம் உயிருக்காக, அறிவுக்காக, ஜீவனுக்காக, மனிதர்கள் உய்வதற்காக வேண்டியே உண்டாக்கப் பெற்ற எல்லா வேத, மத, ஜாதி, குல, கோத்திரம் யாவும் பிரிந்திருந்தாலும் அவை அனைத்தின் உன்னத நோக்கம் மனிதன் பிறவானெறி அடைய வேண்டும் என்பதே. இதனையே அடினாதமாகக் கொண்ட ஆதி மார்க்க னீதி அவை, மின்னணு சஞ்ஞிகை மூலமாக தனது குறி, கோட்பாடு, இலக்கு, பயணம் யாவற்றையும் பிழிவாகப் பிழிந்து எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருளின் திருவடிப் பெருமையை போற்றி



Copyright © AMNA Trust, Chennai

புகழும்படியாக அவ் இலக்கை நோக்கிய பயணத்தில் பரிசுத்த ஆவியின் ஆசீர்பாதத்துடன் பீடு னடை போடுவது பிரத்தியட்சமான நிதர்சனம்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*விதி என்பது இறைவனுடைய கையேடு. அதை யாராவது போய்ப் பார்த்தது உண்டா? விதி போல ஆகு மென்றால் வேதமும் அதற்குரிய வேலையும் ஏனோ? வேதத்தில் அடைவான செயல் இது என்றும் அடாத செயல் இது என்றும் வைத்திருப்பது ஏன்? பாவி என்று உன் விதி இருப்பின் பின் வேதம் எதற்கு? விதியை விட்டு மதியின் மேல் ஏறிச்சென்றால் கரையாகிய எமபடரைக் கடந்து மோட்சத்தில் சேர்வாய்.*

*இத் தூலதேகம் அழியும். அழியின் பிசாசாகவோ அல்லது வேறு எப்படியோ ஆக னேரும். ஆதலின் இப்பொழுதே தேவனாக ஆக முயலவேண்டும். பிறந்நவுடன் மவுத்து என்றது, ஒருவன் தலையில் வந்து விடிகிறது; அதே போன்று எல்லா ஜீவராசிகளுக்கும் மவுத்து இருக்கிறது. ஆனால் அது ஆடு மாடு முதலியவைகளுக்குத் தெரியுமா? தெரியாது. னமக்குச் சாவு இருக்கிறது என்று தெரிந்து கொள்வதை இறைவன் னமக்கு விதியாக்கி வைத்திருக்கிறான். அப்படி விதித்திருப்பது னம் மேல் அவனுக்கு உண்டாகிய பொறாமையா? இல்லை. சர்வலோக ஜீவ தயாபரரின் மகா இரக்கம்தான், மவுத்தை னம் மேல் விதியாக்கிக் கழுத்திலும் கட்டிவைத்திருக்கிறது. அப்படி வைக்காவிட்டால் அதிலிருந்து தப்பி னித்தியத்தை அடைய எண்ணம் வராது. மவுத்தை னினைத்து னீ எந்நக் காரியமும் செய்வதில்லை. பிறகு உன் கதிதான் என்ன? மனிதன் மிருகங்ஙளைக் காட்டிலும் மேலானவன் என்பது எப்படிப் பொருந்நும்?*

*மவுத்து வரும் என்பதை மனிதர்கள் எண்ணத்தில் தூண்டி விடுவதற்கே அந்நந்நக் காலங்ஙளில் இறைவனின் திருத்தூதர்களாகிய மெய்க்குருபிரான்கள் வருகிறார்கள். னாம் ஏற்படுத்திக் கொள்ளுற குருக்களைக் கலீபாக்களென்று வேதம் சொல்லவில்லை. கலீபாக்கள் என்பவர்கள் உன் தலைக்கு வர இருக்கும் ஆபத்தாகிய சாவை ஞாபகமூட்டுபவர்களே. னீ வெளிச்சத்திலிருந்து பழகியவன். ஆனால் னீ சாவென்ற இருட்டுக் கட்டிடத்திற்குள் னுழையப் போகிறாய். ஆகையால் அந்ந ஆபத்துக் காலத்திற்கு வேண்டிய சகல ஆயுதங்ஙளையும் னீ இப்பொழுதே தேடிக்கொள்.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 பிப்ரவரி மாத அவை நிகழ்வுகள் – 2023 மார்ச் மாத வெளியீடு

**01-02-2023 ~ புதன்கிழமை ~ சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

ஆதிமார்க்க னீதி அவையின் குருகொண்டல் சாலை ரவி அப்பா அவர்கள் திரு முன்பாக நாயகன் இல்லத்தில் நடைபெற்ற, சாலை ப. சரவணகுமரன் ஜீவப்பிரயாணமான 40 ஆம் நாள் ஆன்ம சஞ்ஞார உரிமைக் காட்சி சிறப்பு அவை நிகழ்வுகள்.

**பாத லட்சணம் போத லட்சணம்...** என்ற மெய்ம்மண ஞானம் தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

ஈரேழு உலகின் ரகசியத்தையும், பாதத்தின் சிறப்பையும் அதைப் பெற்ற ஆன்மாவின் சிறப்பைப் பற்றியும் பேசும் இம் மெய்ம்மண ஞானப்பாடலின் ரகசியங்கள் யாவும் அவரவரும் உயிருடன் இருக்கும் போதே அனுபவிக்கும் விஷயங்களாகும். உலகில் இறந்தவரை அமரன் எனச் சொல்வதே அறியாமையின் மிகப்பெரிய உச்சம். மெய்வழிச்சாலை உட்பட, வந்த மதங்களின் செயல்கள் யாவும் நரனாய் இருக்கும் ஒருவனை, பெரியோர்கள் சங்காரம் செய்து மனுவாக மாற்றுவதாகவே கூறுகின்றன. அது கடந்து மனுவை அமரனாக்கும் வல்லபமான செயல் நம்மைப் போலவே தூலமெடுத்து வந்துள்ள ஒரு மெய்க்குருபிரானின் திருக்கரத்தில் தான் இருக்கிறது.



பிறப்பறுக்கும் செயலை செய்யும் பிஞ்ஞகன்தன் நோக்கமே பிறவாமைக்கான நோக்கமாகும். அப்படியான பிஞ்ஞகனின் நோக்குக்கு இணங்கி, அடக்கம் இன்னதென அறிந்து பிறவாமைப் பேறு பெற்ற தலைக்குரியவனே சாலை.சரவணகுமரன். அன்னவரின் தேகம் உண்டாகக் காரணமான பிண்டப் பேரணு, தன் மூல வளநாட்டில் சேர்ந்து ஆகிக்கொண்டு, ஜீவன் அடங்கிய நேரத்தில் வினையை அறுத்து பிறவாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வில் குடியேறிக் கொண்டது. இணங்கிய சுபாவத்தால், தனது தேகம் கடந்து நிற்கும் நாமத்திற்குரிய மெய்ப்பொருளை அனுபவத்தால் அறிந்து கொண்ட சரவணகுமரன், **காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி** என்பதற்கேற்ப காதால் ஆகி, இறை அனுபவத்தைப் பெற்று, கண்டதோ சொற்கடங்காத தன் னாமமேயாகும்.

நான் எனும் பொருள் இன்னதென அறிந்து, சரவணகுமரன் தன் ஜீவனைக் கண்டதால் பெற்றதே ஜென்ம சாபல்யம். இதையே வள்ளல் பெருமான் **இறப்பு ஒழிக்கும் சன்மார்க்கம்** என்றார்கள். இச்செயலுக்கான வித்து நாயகமாக, யுகத்துக்கு ஒரு வித்து என யுக நாதனாக வந்தவர்களே பிரம்மப்பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்கள். அவர்களின் திரு நாமத்தை எடுத்துச் சொல்வதற்கான அறிவுடனும் அருகதையுடனும் ஒழுக்கத்துடனும் அவர்களின் திருவுருவைத் தொடர்ந்தால் நாம் அவர்களுக்கு அன்னியம் அல்லாத அனன்யன் ஆகி **சொந்நம் அவர் எல்லோருக்கும் சுயம்வாழி பூங்கிளியே** என்பதை உணர்ந்து



Copyright © AMNA Trust, Chennai

கொள்ளலாம். அவரின் அறிவு வடிவை அறியும் போதே அவர் நமக்குச் சொந்தம் என்பதை அறிந்து சொந்தமாக்கிக் கொண்டதே சரவணகுமரன் செய்த செயல்.

நம் குலதெய்வத்தின் திருவடியைப் போற்றி **ஆதி மனு மகன் என் தெய்வமே** என்ற **தெய்வத் தேடு கூடகம்** பாடல் அவையில் படிக்கப் பெற்றது. குருபிரான் தங்களது திருக்கரத்தால் சரவணகுமரன் குடும்பத்தினருக்கு தீர்த்தம் போட்ட பின்,

**ஆசான் கிருபை மிகுந்நதனால்**
**அந்ந உடல் போய் மறு உடலில்**
**கூசாதிருந்நு தன் னண்டை**
**குறைவொன்றில்லா னிறைவாக**
**தேசா னேசர் சூழ்ந்நிருக்க**
**திருவோலக்கம் சேவிக்க**
**ஈசாவென்று மறைபோற்ற**
**எய்தும் பரமபதம் னெஞ்சே**

என தெய்வத்தை தோத்தரித்து பாடல் படிக்கப் பெற்றது.

இங்கு நடக்கும் செயல் கற்பனையாக சொல்வதோ செய்வதோ அல்ல. சரவணகுமரன் தான் வந்த சிறிய காலத்திற்குள் பிறவி மாறிடும் லட்சணத்தை உணர்ந்தவன் என்ற குருபிரானின் ஆசீர்பாத ஒலிவாயுரையைத் தொடர்ந்து, சரவணகுமரனின் ஆவணப்படம் ஒன்றும், முத்திப் பேருரை ஒன்றும் ஒளிபரப்பப் பெற்றது.

பெரியோர்கள் வகுத்து வைத்துள்ள காலக்கணக்கை நாம் வாழும் காலத்திலேயே குருபிரான் வழிகாட்டுதலின்படி ஓயாத்தொழுகை இன்னதென அறிந்து, அதனை வைராக்கியம், பத்தியம், ஒழுக்கம் கொண்டு தொடர்வதன் மூலமே ஜீவப்பிரயாணச் செயலை கை வரவாக்கிக் கொள்ள முடியும். அப்படி மெய்ப்பொருளான, சிவமயப் பொருளை நாம் அறிந்து ஜென்ம சாபல்யம் பெறுவதே காமீல்களாகிய பாரவான்களின் ஒரே நோக்கமாக இருக்கிறது என ஆவணப்படத்தில் சரவணகுமரன் ஆற்றிய முத்திப் பேருரை நினைவு கூறத் தக்கதாகும்.

*சரவணகுமரனின் தந்தை, பழனிவேல்:* என்மகன் சரவணகுமரன் குருபிரானின் திருவடிகளைச் சார்ந்து மனிதனாகி நல்ல கதிநிலை பெற்று விட்டதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன். குருபிரானின் உத்தரவைக் கேட்டு விரைவாகச் செயலாற்றி முடிக்கும் சரவணகுமரன், இன்று எல்லோருடைய நினைவிலும் நிறைந்து இருக்கிறான் என்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்.

*சரவணகுமரனின் சகோதரர் கோபிநாத்:* எனது அண்ணன், எனது வாழ்வாதாரமாகிய படிப்பு, வேலை, யாவற்றிற்கும் வழிகாட்டியாக இருந்து, கிடைத்தற்கரிய இம்மெய்ப் பயணத்திற்கும் வித்திட்டு, ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமாக நான் ஆனதற்கான புண்ணியத்தையும் சேர்த்துக் கொண்டவன். நம் எல்லோருள்ளும் அவன் ஜோதியாய் கலந்து நிற்கிறான் என்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன். மேலும் தாமோதரன், வளவன் ஆகியோர் சரவணகுமரன் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

**குருபிரான் அருளமுதம்:**

**பெற்ற பேர்பெற்ற சாயுச் யபதம்**
**பேட்டி காணவ ருமிந்நப்**
**பேறு பெற்றவர் மாறு பட்டில**
**ரென்று னான்மறை பேசுமே**



Copyright © AMNA Trust, Chennai

தத்துவங்கள் அனைத்திற்கும் இலக்காகி நிற்கக்கூடிய ஒரே இனம் மனித இனம். ஆறாவது அறிவு என்ற சாதனத்தைக் கொண்டு அறிவு வடிவாகி, நாலாம் பதமான சாயுச்சிய பதம் பெற்று, இன்று இக் காணொளிக் காட்சி மூலம் நாம் கூடுவதற்கு வித்திட்ட *சரவணகுமரனின்* விசுவாசத்திற்கு ஏற்ப எல்லாம் சிறப்பாக நடந்தேறியது. அந்த குடும்பத்திற்கு எல்லா ஷேமாதி ஷேமங்களையும் வரங்களையும் அளிக்க ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தை வேண்டிக் கொள்வோம். ஆதிமார்க்க னீதி அவை அன்னவரின் குடும்பத்தினருக்கு என்றென்றும் துணை நிற்கும் என்ற ஆசீர்பாதத்துடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**02-02-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**தந்நருள வேண்டுமென்ற மைந்நர் தம்மை...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே மலர்ந்தன.

**வான்மதிக்கொரல் திருவாக்கியம் எண் - 99 :** தன் எனும் ஜீவகுகையில் குடியேற்றி வைக்கும் ஆசானின் நோக்கிற்கு இணங்கி நடப்பதே அறம். அதுவே தன்னை அறிதல். மறுவிலா குகனாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணிய கடவுள் இருக்கும் இடமே தன் எனும் ஜீவகுகை. தன்னை அறிதலே இன்னில வாழ்வு. அனித்திய ஆக்கை குடிலை விட்டு அழியாத தேகமாகிய ஐந்து எழுத்து மந்திரத்தில் குடியேறி வாழும் செயலை செய்து வைப்பவரே மெய்ஆசான். ஆசானின் நோக்கிற்கு இணங்குவதே மனம் அலையாமல் பாதுகாக்கும் செயலாகிய அறம் என மெய்வழி ஆண்டவர்கள் அருளுகிறார்கள். அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தால் பிறவாமை என்ற நிலையை கைக்கொள்ளலாம்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல** **(திருக்குறள்)**

பற்று உண்டாவதற்கு காரணம், பார்க்கும் பொருள்களின் மீது உண்டாகும் இச்சையே. துக்கமற்ற நித்திய சுகத்தை அடைவதற்கு நமக்கு அறிவு வேண்டும்.

**தொண்டெழு மனிதன் சுத்தத்**
**துறையிரு தயத்தி லன்றி**
**விண்டெங்கும் வெளியா காத**
**இறைவனை இறைஞ்சு வோமே**

என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அவரவரின் நாமமாக உள்ள இறை திருவடியே இலானடியாக இருப்பதை குணங்களற்ற நிர்க்குண நிலையிலிருந்து கண்டால், யாண்டும் இடும்பை இல எனும் எக்காலத்தும் துன்பமற்ற பேரின்ப பெருவாழ்வு பெறலாம். நம்மிடம் குற்றமாக உள்ள காலமெனும் காலனை இலானடி எனும் திருவடியின் துணையுடன் வெல்லலாம்.

*ஜீவசகோதரி லாவண்யா:*

**அந்த னாளில் அணைத்தெனை யாட்கொண்டு...** **(குரு ஸ்தோத்திரம்)** அறியாமையினால் நாம் வீணாக்கும் வாழ்நாளை நலன் தர மீட்டித் தரும் ஞான சூரியனாக குருபிரான் வருகிறார்கள். ஓசை கொண்ட திருநடனத்தால் மெய்ஆசான், மெய் மணத்தில் நம்மை ஆக்கி வைக்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** வயது வாழ்நாள் என்ற பிராணனின் ரகசியமே பிரதோஷ ரகசியமாக உள்ளது. நாம் இவ்வுடலில் ஆவிப்பொருளாக, ஆன்மாவாக இருப்பதை அவரவரும்



Copyright © AMNA Trust, Chennai 

தன் அடையாளமாகிய இறைவனின் சாயல் மூலம் அறியலாம். நம்முள் பற்றற்று நிற்கும் பரம்பொருள் உணர்வு, கவனம், அறிவு, வேகாக்கால், ஆவி, திருச்சிற்றம்பலப்பொருள், அவ்வு, தாத்து, கலை, காலம், சத்து, காயம் என பலவித நாமங்கள் கொண்டதாக உள்ளது.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகுஅணி சித்தர்** பாடல்

**சம்பா அரிசியடி சாதஞ் சமைத்திருக்க**
**உண்பாய்நீ என்று சொல்லி உழக்குழக்கு நெய்வார்த்து**
**முத்துபோ லன்னமிட்டு முப்பழமுஞ் சர்க்கரையுந்**
**தித்திக்குந் தேனமிர்தம் என் கண்ணம்மா**
**தின்றுகளைப் பாறேனோ**

இறை சன்னிதியில் அறுசுவை உணவு படைப்பது நம்முள் அறுசுவை ஒடுங்கும் ரகசிய இடத்தை நாம் அறியவே தான். பெரியோர்களின் வாய்மையான செவி உணவே நம் ஜீவனின் களைப்பை மாற்றும். பொறிகள் ஓடாத இடத்தில் லயித்திருப்பதே சுகம். தேடிவந்த தேட்டாளர்களை களையாற்றிய விதத்தை மெய்வழி ஆண்டவர்கள் தேடு கூடகத்தில் **களையாறிடுங்கள் ஐயா** என்ற பாடலில் அருளியுள்ளார்கள். சாதம் சமைத்து இருப்பது என்பது வயது தந்ததின் பிரயோஜனமும் பிறப்பின் ரகசியமும் பற்றியது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **அமுத கலைக் ஞானபோதம் - இரண்டாம் காண்டம்:** புதல்வர்களாகிய மாணவர்களுக்கான புதையல் என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். **இல்லறம் முதல் சமத்துவம் வரை வேர்மேலும் தலைகீழ்** என்பதின் ரகசியத்தை மெய்வழி ஆண்டவர்கள் **னீதி னடவு ஆதிமூல னேரத்தில்** தொடங்கி, **சமரச வேத னாதாவே** என வணக்க முறைகளில் அருளியுள்ளார்கள்.

**சமத்துவம்:** சரமதுவே சமரச சன்மார்க்க பஞ்ஞாட்சரமாக, வெறி கொண்ட மனதின் சரத்தை சமத்துவத்தில் ஆக்குவதாக உள்ளது.

**அறம்:** **அறம் செய்ய விரும்பு. ஆறுவது சினம்** மனம் அலைந்து கூற்றுவனாக மாறாமல் உயிர் தெளிந்து சிவமாகி பிர்மானந்தத்தில் இருந்து வாழும் செயலாகும்.

**துறவறம்:** துறந்த மனத்தனியோகர்கள் அருளும் செயலாகிய மனதை துறப்பதே துறவறம்.

**வானப்பிரஸ்தன்:** ஆசான் அருளால் பேரின்ப வடிவான புகழுடம்பு பெற்று வானுலகப் போக்குவரத்து அறிந்து பரத்தின் நன்னிலை தன்னில் காண்பவன் வானப்பிரஸ்தன்.

**பிரம்மச்சாரி:** பெரியோர்களின் பேரிரக்கத்தால் அன்னம், மயில், வாசி எனும் குதிரை ஏறி மெஹ்ராஜ், வைகுண்டம், கைலாயம் முதலிய மேல் உலகங்களுக்கு சென்று வருபவர் பிரம்மச்சாரி.

**சன்யாசம்:** தாமரை இலை நீர் போல் உடலில் ஒட்டி ஒட்டாது ஓங்கும் பஞ்ஞாட்சரமாக இருப்பதை ஆசான் அருளால் அறிந்து ஜகத்தினரோடு இனிதே சேர்ந்து வாழ்தல்.

**கிரகஸ்தன்:** நவக்கிரக தலைவனான மனம் அஸ்தமிக்கும் செயல் கிரகஸ்தன்.

**இல்லறம்:** அறம், பொருள், இன்பம் மூலம் அடைவது வீடு. மனம் அறிவாக மாறி ஜீவன் இருக்கும் மூலவள நாட்டினுள் நுழைந்து இரண்டற கலக்கும்போது அதுவே சொந்த வீடாக இல்லறமாகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்: அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம் : பாடல் எண் 43, 44, 45 :** **பஞ்ஞு லச்சணப் பல்கலை...** நாம் நமது பொய்மல குற்றங்களை அறியாது, அறியாமையினால் ஆணவமலம் மிகுந்து அஞ்சுகன் எனும் எமன் கை வசப்படவே தயாராக உள்ளோம். **தனித்து முன்துடர் தாழ்மையன் றன் வினை...** வினை வழி வந்த நாம் வினை அறுக்கும் செயல் செய்யாமல், தீமை எனும் விதையை விதைக்கிறோம்.

**இருள்சேர் இருவினைசேரா இறைவன் பொருள்சேர்**
**புகழ்சேர் புரிந்தார் மாட்டு** என திருவள்ளுவரும் அருளியுள்ளார்கள்.

இறைவனின் திருச்சிற்றம்பலப் பொருளை மட்டும் சேர்க்கும் போது வினையை அறுக்கலாம் என்கிறார் வள்ளுவர். **சிற்ற றிவிற் கற்றும்பய னற்றவர்க்குக் கற்பகத்த ருவெனவந் நேவ சந்தவா...** என குருவின் மேன்மையை மெய்வழி ஆண்டவர்கள் அருளுகிறார்கள் என குருபிரான் அருளியதை தொடர்ந்து, தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் நிறைவுற்றன.

**04-02-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண்: 118** நமது உடல், பொருள், ஆவி யாவும் ஆசானின் எண்ணத்திற்கு லயப்பட்டு நின்றால் மீட்பு நிச்சயம். மெய்யினிடத்தில் அவரவர்க்கு இருக்கும் ஆத்திரத்திற்கு தக்கபடியே மீட்பும் தண்டனையும் இருக்கிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:*

**உடலென்றாற் சடாதார உடலேயாகும்**
**உயிரான பிராணனே ஆவியாகும்**
**திடமாக விரண்டையுந்நா னெனதென் றுற்ற**
**ஜீவனே சிற்றம்பலப் பொருளதாகும்...**

என சிவானந்த போதத்தில் அருளியுள்ள படி நம் தேகாதியந்தமாகிய உடல், பொருளாகிய வாக்கு, ஆவியாகிய பிராணன் மூன்றும் ஆசானின் செழுஞ்ஞீதள மனோனோக்கிற்கு இணங்கி னின்றால்தான் எமனின் கோர தண்டனையிலிருந்து தப்ப முடியும்.

*ஜீவசகோதரி லாவண்யா :*

**மௌன வைப்பின் வகை விரித்தே யெனை .... (குரு ஸ்தோத்திரம்)**
நம்முள் ஓயாமல் பேசிக் கொண்டிருக்கும் மனதை மௌனத்தில் ஆக்குபவரே **மௌனகுரு**.

**விளைவு உதய வித்தென்னும்**
**தவன துவச**
**மவுன ராகமாங்**
**ஙவன காவிய....**

என சாலை ஆண்டவர்கள் முகப்பு பாடலில் அருளியுள்ள படி, மௌன தேசிகராகிய ஆசானின் மணி மந்ர ஔஷதமானது நம் மனதை தளிரச் செய்து, தவனமெனும் தாகத்தை தீர்த்து, கவனாதி எனும் மௌன வைப்பில் ஏற்றி வைக்கிறது.

*எதன் ஞானம் இவ்வெல்லாமுமாமோ, வேறுபட்ட பேதத்தால் (பேதம் னீங்னியதனால்) திருசியமன்றோ, அந்த என்றும் ஏகரூப வடிவினராகிய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத்கீதை - அர்ஜுன விஷாத யோகம் :**

வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் அமர்ந்திருந்த ஸ்ரீகிருஷ்ண பகவான் பாஞ்ச சன்யம் என்ற சங்கையும், அர்ஜுனன் தேவதத்தம் என்ற சங்கையும் முழக்கினார்கள். குருபிரானின் னாதமே ஞானச்சங்கு எனும் **யாய சங்குப் பலகையாக** இருந்து னன் மக்களுக்கு குந்த இடம் தந்து ஜென்ம சாபல்யம் அளிக்கிறது. னற்றாள், திருவடி, பாதம், உகாரம், எழுதாத எழுத்தாக னின்று இலங்கும் சங்கின் இரகசியத்தை **ஊதூது, ஊதிடும், ஊதடா, ஊதுமே, ஊதுதே சங்கே** என ஆண்டவர்கள் ஐந்து னிலைகளாக ஞானச் சங்கு பாடலில் அருளியுள்ள அகமிய செயலை குருமுகமாக பழகித் தேர்வதன் மூலமே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **தைப்பூசம் சிறப்புகள்**

- தை மாதத்தில் பூச நட்சத்திரமும் பௌர்ணமியும் சேரும் நன்னாளில் முருகப் பெருமானுக்கு கொண்டாடப் பெறும் திருவிழாவாகும்.
- சக்தி தேவியிடம் முருகப்பெருமான் ஞான வேல் பெற்ற தினம்.
- வள்ளல்பெருமான் அருட்பெருஞ்ஜோதியாகிய இறைவனுடன் ஐக்கியமான திருனாள்.
- காலச்சக்கரத்துள் பொதிந்துள்ள 12 ராசிகள், 27 நட்சத்திரங்கள், 108 பாத னிலைகளின் மெய்மை இரகசியத்தை தீரவேல் தாங்கி வரும் செம்மலின் அருளால் அறிந்து அறிவு வடிவாகும் னாளே தைப்பூசம்.

*ஜீவசகோதரர் வடிவேலன் :* ஞானசைதன்ய அரசு ஸ்ரீ சுப்பிரமணிய பெருமானுடைய தைப்பூசத் திருனாளானது, ஞான னிறைவு னிலை எனும் பூரண னிலையை உணர்த்தும் உள்ளமை இரகசியமாகும் என வள்ளல்பெருமான் அருளியுள்ளார்கள். ரிக் வேதத்தில் ஸ்ரீ கந்தர் என்ற னாமத்தில் அழைக்கப்பெற்ற முருகப்பெருமான், பாசடை மனத்தோர்களாகிய காமாதி அசுரர்களை கருவறுக்க வீரவேல் தாங்கி வந்தார்கள்.
**சாலை ஐயறன் சோலினாப் பைதன்னை...** என்ற காலந்நாட்டிய காரணப்பா பாடலின்படி சொர்க்க, மத்திய, பாதாளம் எனும் மூன்று உலகத்தையும், காலம் மூன்றின் இரகசியத்தையும், மும்மலத்தின் மூலம் விளைகின்ற வினைப் பயனையும், மும்மூலம் கைக்கொள்ளும் செயலையும் குருபிரான் தன் வேல் கொண்டீட்டி நம்முள் விரித்து காட்டும் திருனாளே தைப்பூசமாகும்.

பிரணவ சொரூபியாக வரும் மெய்குருபிரானின் இரக்கத்தால் எமபடர் அச்சத்தை மாற்றும் **சாலைத் தமிழின்** பிரம்மாண்ட னிலைகளைப் பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழ்வோம் என்ற பகிர்தல்களுடன் அவை இனிதே னிறைவுற்றது.

**05-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகிவளர்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி கல்பனா:* னித்திய சுகத்தை பெறுவதற்கான வழியை அருள வந்தவர்களே வேத கர்த்தாக்கள். மரணமிலாப் பெருவாழ்வே னித்திய சொர்க்கம் அளிக்கும் வீடாகவும், அதில் குடியேறிவாழ கற்பிக்கும் கல்வியே சாகாக்கல்வியாகவும் உள்ளது. அமானிதமெனும் அறிவைச் சுமந்து வந்தவன் மனிதன். உடல்-உயிர்-ஆன்மா எனும் மூன்றையும் அறியும் அறிவு மனிதன் ஒருவனுக்கே உண்டு. மரணத்தை நோக்கிச் செல்லும் அழிவுடலுக்குள் இருக்கும் னித்திய சுக உடலில் குடியேறி வாழப் பழகுவதே பிரம்மவித்தை. மனுத் தோற்றமுடன் ஈசனின் சக்தி கொண்ட குருபிரானின் ஓசை கொண்ட னடனமே னரனை மனுவாக்கி, தேவனாக மாற்றுகிறது. இச்செயலே பரிசுத்த ஆவியினால் பிறக்கும் மறுபிறப்பு. கர்த்தர் என்பவர் கடவுளைக் காட்டும் குருபிரானே. *மண்ணால் உருவாக்கிய மனுவிற்கு தேவனாகிய கர்த்தர்*


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசுவாசத்தை அவன் னாசியில் ஊதியதும் அவன் ஜீவாத்மா ஆனான்.* ***(சத்திய வேதம்)*** ஜீவன் என்பது அறிவாகவும், சுவாசம் என்பது **சு** எனும் தந்தை சொல்லாகிய மந்திரத்தில் வாசம் செய்வதாகவும் உள்ளது.

**சாலை ஐயறன் சோலினாப் பைதன்னை**
**வேல்கொண் டீட்டிவி ரித்துள்ளே காட்டிட**
**மேலே சொர்க்கமும் மத்யபா தாளமும்**
**கால மூன்றுங்கண் டதுப தேசமே** **(காலந் நாட்டிய காரணப் பா)**

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, ஆசானின் சோலினாப் பையில் இருந்து வரும் கூர்மையான வேலே முக்காலங்களும் காட்டவல்லது. ஐம்புலன் வழியாக சுவாசம் துண்டாடப்படுவது பாவமாகவும், ஐம்புலக் கதவடைக்கும் செயலே பேரறிவாக பிரம்மவித்தையாகவும் உள்ளது. மனமுடன் இருப்பது சிற்றின்பம், அறிவுடன் இருப்பது பேரின்பம். பஞ்ஞு புலன்களின் மூலம் பஞ்ஞுபாவம் நடை பெறாமல் இருக்க மனம் அடங்க வேண்டும். அனித்திய உடலில் இருந்து னித்திய உடலில் நம்மை பெரியோர்கள் ஏற்றி வைக்கும் செயலே உபதேசம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்: குருவே சிவன் எனும் உண்மையை அறியாத ஜபம், தபம், விரதம், தீர்த்தம், யாகம், தானம், யாவும் வியர்த்தமே.* **(குரு கீதை)**

கடமாகிய தேகத்துள் இருக்கும் **நான் கடவுள்** எனும் ரகசியத்தை அறிவதே தன்னையறிதல். மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் நான்கும் ஒன்றான குருவின் அருளன்றி ஞானம் அடைய இயலாது. தோற்றமும் மாற்றமுமில்லா அனாதியே தோற்றமும் மாற்றமும் உள்ள ஆதியாகிறது. மனுவின் கடமை மெய்ப்பால் அறிவதும், தான் இவ்வுடம்பல்ல என அறிவதும் ஆகும். தியானத்திற்கு மூலமான குருவின் திருவுருவின் மூலமே இறைவனை அடைய முடியும். மனதற்ற பரிசுத்த அறிவு நிலையே மரணமிலாப் பெருவாழ்வு. ஒளியின் ஆதாரமாக, நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும், தோற்றமில்லா அரூபவடிவமே னித்தியப் பொருள். எண் எனும் அகரத்தையும், எழுத்து எனும் மோன எழுத்தையும் குருபிரான் அருளால்தான் அறிய முடியும். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் அருளால் மூலமந்திரம், பாதபூஜை, மகா சங்கல்ப மந்திரம் ஆகியவற்றை செயலாகக் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை என்ற பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 09-02-2023 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்

**குருபிரான் அருளமுதம்:**
**வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்...** என வள்ளல் பெருமான் ஆறாம் திருமுறையில் மனித குலம் உய்ய வேண்டி, அருளிய சன்மார்க்க மரபு மற்றும் கொள்கைள் சார்ந்த வைர வரிகளுடன் அவை இனிதே மலர்ந்தது.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் - 100 :** தன்னை அறிந்த ஞானிகளின் தயவால் அவரவரும் தன் கடத்துள் இதய தாமரையில் இருக்கும் ஜீவனை சந்தித்து வணங்குவதே தரிசனை எனும் மெய் வணக்கம். மனிதன் இதனைத் தேடி அறியவே பெரியோர்கள் நகல் அடையாளமாக கோயில்கள் மற்றும் வணக்க முறைகளை உண்டாக்கினர்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **அண்ட ராலும றியவொண் ணாத்திரு... (குரு ஸ்தோத்திரம்)**
தேவர்களாலும் அறிய முடியாத திருவெனும் இமையா னாடாகிய திருவடியை தேடி அலைந்த தேவர்களின் நிலையை பல புராணங்களும் கூறுகின்றன.



Copyright © AMNA Trust, Chennai 

**திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்**
**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் சிறைமலம் நீக்கும்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே**

என திருமூலர்பிரானும் அருளியுள்ளார். மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் அணுவுக்கு அணுவாகவும் அண்ட பிரம்மாண்டமாகவும் விளங்கும் சிவமயப் பொருளே தூலம் தாங்கி, அறிவெனும் உகார வடிவாக, மெய் ஆசானாக, ஈசனாக யுகந்தோறும் வருகிறார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகுஅணி சித்தர் பாடல் எண் 4: சம்பா அரிசியடி சாதஞ் சமைத்திருக்க…** அன்னப் பறவை, பாலில் நீரைப் பிரிப்பது போன்றும், சிற்பி கல்லில் தேவையற்றதை நீக்கி சிற்பம் தருவது போன்றும், மெய்ஆசானும் நம் மனதிலுள்ள தீமைகளை நீக்கி அறிவாக மாற்றுகிறார்கள். பால், தயிர், வெண்ணை கடந்து வரும் நெய் கெடாதது போல், ஒவ்வொருவரும் சரியை கிரியை யோகம் என்ற நிலை கடந்தால் ஞானம் என்ற அழியாப்பதம் பெறலாம். பொய்யின்றி மெய்யோடு நெய் கொண்டு போனால் ஐயனை காணலாம் என சபரிமலைக்கு நெய்த்தேங்காய், நெய்அபிஷேகம், நெய்தீபம் ஏற்றுவது உணர்த்தும் செயலும் இதுவே.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு** **(திருக்குறள்)**

இருள் என்பதன் பொருள் அந்தகாரம், கறுப்பு, மயக்கம், அறியாமை, துன்பம், நரகவிசேடம், பிறப்பு, குற்றம் என்பன. புறஇருள் போக்கும் சூரியன் போல் நம் அகஇருள் நீக்கும் ஆசானின் அருள் அமுதமே ஞானசூரியன். இதனை **அருட்பதி தேட இருட்குடி ஓடும்** எனவும், தேடாவிடில் நமது அதிகமான உறக்க நாடகம் வர வர மிஞ்ளிப் பெரிய உறக்கமென்னும் பேரிருள் கிடங்கு உலகத்தே தள்ளி விடும் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மூவினை அகற்றி விழிப்புலகு ஏற்றும் ஆசானே முழு முதற் கடவுளாகிய விநாயகர். தனிகை மணிப்பிரான் மெய்ப்பொருள் சுமையும் கைப்படம் மாறா வெகுமதித் சுமையும் சாலை ஆண்டவர்களுக்கு வழங்கியது போல், நம்மில் நாம் அறியாத மெய்ப் பொருளாகிய அமானிதத்தை அறிய வைத்த ஆசானின் பொற்பாதம் போற்றி வணங்குகிறேன்.

**குருபிரான் அருளமுதம்:**
**அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம் : சலியாத பெருவாய்மை…** உலக காரியங்களில் தெளிந்த அறிவுடன் வாழும் நாம், தெய்வீகத்தில் மட்டும் தெற்கில் சென்று காசி கண்டேன் என கூறும் போலி வேடதாரிகளை நம்பி ஏமாறுவது ஏனெனில், வேதம் படிக்காததும், படித்தாலும் அதைப்பற்றிய அக்கறையின்றியும் மெய்ஞானிகளைத் தேடாமல் இருப்பதுமேயாகும்.

**குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்**
**குருடுங் குருடும் குருட்டாட்டம் ஆடிக்**
**குருடுங் குருடும் குழிவிழு மாறே**

என திருமூலர் அருளியுள்ள படி, கழுத்திற்கு கீழே ஞானம் இருப்பதாக போதித்து, அவமான தோற்றமுடனும் அழிபெயருடனும் போலி வேடதாரிகள் மக்களை ஏமாற்றுகிறார்கள். எனவே தெளிந்த அறிவுடனும் விழிப்புணர்வுடனும் இருத்தல் அவசியம் என அருளி, தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**11-02-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**அரண்டிடும டத்தாருப தேசமத ழிம்பெனக்கண்**
**டக்கினியி லிட்டெடுத்த பின்...**
என்ற **ஞான முறையீடு** தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் – 119:** ஆசானுக்கு சீடன் செய்யும் உபகாரம், புலிக்கு எலி உபகாரம் செய்வது போலும், எலி யானைக்கு கோவணம் கட்ட முயற்சிப்பது போன்றும் ஆகும்.

**குருபெருமான் அருளமுதம்:** புல் பூமி உள்ள நாள் வரை செயற்கரிய செயல் செய்யும் பெரியோர்களுக்கு, ஒரு சீடன் அறிவுரை செய்வது இயலாத காரியம். யுகத்துக்கு ஒரு முத்தென அவதரித்த பரம்பொருள், பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்கள், பரிசுத்த ஆவித் தெய்வமாக நம்மிடம் அறிவு வடிவாக குடியேறி இருப்பதை நாமும் அறிவு வடிவாகி தெரிசிக்கலாம். ஆசானிடத்தில் அகலாது அணுகாது நெருப்பில் குளிர்காய்வது போலிருந்து அவர்களின் சொற்படி நடக்க, நம் அனீத மும்மலத்தை னீதமாக்கி செயலுடைய சமரசத்தை அறிய வைக்கிறார்கள். சர்வத்தையும் ஊடுருவிப் பார்க்கும் சுத்தாவி கலாமணி ஒத்தை மணித்தவுசான மந்திரப் பொருளை உணர வைத்து நாம் ஒரு ஆவிப் பொருள் என்பதை அறிய வைக்கும் அவரே அமரத்துவம் பெற்ற பரிசுத்த தேவ ஆவியானவர்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **தாகந் நீர்த்தத னிப்பெருங் ஙடலே... (குருஸ்தோத்திரம்)** அலையும் மனதின் தணியாத தாக மோகத்தால் அருங்கோடை பாலைவனம் கானகமான இவ்வுலக வாழ்வில் களைத்திருந்த எனது தீராத களைப்பினை அகற்றி, மோகம், தாகம், சோகம் நீக்கும் சஞ்சீவியாக கற்பகத்தருவென வந்த குருவின் பொற் பாதங்களுக்கு நமஸ்காரம்.

**குருபெருமான் அருளமுதம்:** புலன்வழிப் பற்றி மன மயக்கத்தால் வயது வாழ்நாள் வீணாவதைக் காட்டி, ஐம்புலக்கதவை அடைக்கும் உபதேசத்தை குருபிரான் அருளுவதையே **வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க** என சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **சத்தியவேதம் - ஐந்து ஆகமங்கள்**

**ஆதியாகமம்:** ஆதியிலே இருந்த வார்த்தை தேவனாகவும் நம்மை தேவனாக்கவும் வந்தது.

**யாத்திராகமம்:** எகிப்து தேசத்தின் அடிமை மக்களை மீட்டு, காணான் தேசத்தில் குடியேற்றுதல். தீர்க்கதரிசியான குருபிரான் இவ்வுடலெனும் தேசத்தில் புலனுக்கு அடிமையானோரை யாத்திரையெனும் மெய்யான பயண வழியில் கூட்டி, தேவலோக அருளமுதை ஊட்டி, மனதின் பிடியிலிருந்து மீட்டு, அழிவை காணா புண்ணிய தேசத்தில் குடியேற்றும் செயல்.

**லேவியராகமம் :** கோத்திரப் பரம்பரை சந்ததிகள் பற்றியும், வருகின்ற பெரியோர்கள் தன்னை சார்ந்த மக்களுக்கு ஞானமளிக்கும் தீர்க்கதரிசனங்கள் பற்றியும் உள்ள ஒலித் திருவசனங்கள்.

**எண்ணாகமம்:** எண் எனும் அகரமுதல் அவரவரிடம் ஜீவனாக, ஆன்மாவாக உள்ள நிலைகளை அறிவதற்கான போதனைகளும், அகர முதல்வனாகிய இறைவனை அடையும் நிலைகளும் அருளப்பெற்றுள்ள தீர்க்க தரிசனங்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**உபாகமம்:** அகமிய ரகசியமாக உள்ள சுவிசேஷ நற்செய்திப் பெட்டகத்தை திறக்கும் மெய்ஆசானின் அருண்மணித் திறவுகோலால் திறந்து இறைவனை அடைவதற்கான செயல் பற்றி விளக்குவது.

**குருபெருமான் அருளமுதம்:** ஐந்து ஆகம செயல்களும் தேவனுடைய ராஜ்யமான பரலோகத்தை நாடவும், மனிதனை மகானாக்கவும், பிறவா நெறி அளிக்கவும் அருளப் பெற்றுள்ளது. சர்வ மதங்களின் வேத வழிமுறைகள், வணக்க முறைகள் யாவும் பிறவாமையை நோக்கிய பயணமே.
*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத்கீதை**

**இன்னில மாய்கை யாலும்**
**இடைஞ்ஞலின் வெட்கத் தாலும்**
**னன்னிலைக் கேற வொட்டா**
**னழுகிக்கீ ழிழுத்துத் தள்ளும்...** **(குரு முறாதி)**

மும்மலத்தால் வினை விளைகிறது. தர்மனின் நான் எனும் ஆணவம், அறிவு வடிவான பரமாத்மாவை மறைத்ததால், கன்மம் எனும் சூதாட்டத்தில் நாடு, மனைவி, மக்கள், சகோதரர்கள், உடைமைகளாகிய அனைத்தையும் இழந்தான். போரில் மாயை எனும் மனமயக்கத்தால் மனசஞ்சலத்தில் ஆழ்ந்த அர்ஜுனன் தன்னறிவில் சாய்வதை விட்டு பகவானிடம் சரணாகதி அடைந்ததால் வினையிலிருந்து மீண்டு போரில் வெற்றி பெற்றான்.

**குருபெருமான் அருளமுதம்:** யுகந்தோறும் வருவேன் என்று கூறிய பகவானைத் தேடும் எண்ணம் உள்ள மெய்மனத்தவர்க்கு, னீதி இன்னதென உணர்த்த, குருவே பகவானாக வந்து அவர்களை மனுவாக்கி, சரணாகதி அடைபவர்களை தேவனாக்குகிறார். ஒரு மொழி கீதையான வாய்மையால் மனபயம் நீங்கி, பக்தியின் மூலம் முக்தி நிலை அறிந்து வாழ்வாங்கு வாழ வழி காட்டுவதே பகவத்கீதை.

**அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**

1) **சமத்துவம்**
2) **அறம்**
3) **துறவறம்**
4) **வானப்பிரஸ்தன்**
5) **பிரம்மச்சாரி**
6) **சன்னியாசம்**
7) **கிரகஸ்தன்**
8) **இல்லறம்**

எனும் எட்டு நிலைகளும் வேர்மேலும் தலைகீழாக உள்ள அஷ்டாங்க யோக செயல்களாகும்.

உலக மக்கள் போலி குருமார்களின் பொய்களை நம்பி அடையும் கதி பற்றி ஆசானிடம் சீடன் கேட்கிறான். வேதத்திற்குப் பொய் அர்த்தம் பண்ணும் மன்னர்கள் நரிவால் கொண்டு கடல் ஆழம் காட்டுவது போல், உபன்பயாசம் என்ற பெயரில் விதைக்கும் அறியாமையை உலகினர் சோளத்தை முத்தெனவும், பெருவயிறை சூலெனவும் நம்பி ஏமாறுவது போல், எரியும் விளக்கை மலரென நினைத்து பாய்ந்து அழியும் விட்டில் பூச்சி போல் அழிநரகில் வீழ்வர். நரகம் என்பது நர ஜென்மமான ஐயறிவு ஜீவபேதங்களுள் ஒன்றாகி சீரழிவதே ஆகும்.

**வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்...** பரத்தோடு இருந்த வித்துதான் முதலில் வந்தது. சத்தியவேதம் ஆதியாகமத்தில், **உண்டாகக் கடவது** என தேவன் சொன்ன வாக்கே



Copyright © AMNA Trust, Chennai 

வித்து. மனுத் தோற்றத்திற்கான வித்து, தந்தை தாய் வழியாகவும், அமரனுக்கான வித்து அழிவற்ற ஆசானின் னாதமாகிய வித்தில்லா வித்துமாகும். **தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினால் ஜனித்தவர்கள் தேவர்கள். (சத்திய வேதம்)** ஆண்டவர்கள் அருளியுள்ள ஆதிமான்மியத்தில் இன்னூலில் உள்ள பத்து திருப்பாடல்களை மெய்ஞ்ஞான ஓர் சிவகுருபிரானை ஆய்ந்து தேடி அவர்களின் செழுஞ்ஞீதள மனோனோக்கிற் கிணங்கி வருங்கால மக்கள் விளங்கிக் கொள்வார்களாக என ஆசீர்பாதமாக அருளியுள்ளார்கள். இதனை அறியக்கூடிய ஆதி மார்க்க னீதி அவையின் மக்களின் உள்ளத்தில் அறிவு வடிவாகக் குடியேறி அறிவின் வழியான மெய்வழியில் வழி நடத்தும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**12-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்**

**துறந்நமனத் தனியோகர் உளத்திற் பூக்கும்...** என்ற அமுத கலைக்ஞான போதம் இரண்டாம் காண்டம் பாடலுடன் அவை மலர்ந்நது.

தியானத்திற்கு மூலம் குருவின் திருவுருவம் பூஜைக்கு மூலம் குருவின் பாதம் மந்நிரத்திற்கு மூலம் குருவின் வாக்கியம் முக்திக்கு மூலம் குருவின் கிருபை **(குரு கீதை)**

**குருபிரான் அருளமுதம்:**

காஷாய தீட்சை பிரமாணத்தில் உள்ளதும், புனல் ஜென்ம நிகழ்ச்சியில் பாடுவதுமான இப்பாடலும் மற்ற பாடல்களும் உணர்த்தும் வேதாந்த இரகசியங்கள் யாவற்றையும் மெய் உணர்வைப் பெறும் போதே அறிய முடியும். மும்மலம் அற்றவரின் திரு னாமங்ஙளே நிமலன், அமலன், விமலன் என்பதாகும். ஆணிப்பொற் கிண்ணத்தில் அளிக்கப் பெற்ற மெய்வழித்துணை மருந்தாகிய பொற்கிண்ண மெய்ஞானப் பாலருந்தியவரே, தேவாரக் கிரந்தம் அருளிய முத்துச் சிவிகை ஏற்றத் தோன்றலராகிய வரத திரு ஞான சம்பந்தரவர்கள். ஆசானின் அருளமுதமே பொற்கிண்ண மதுபானமாக, னாத மருந்நாக, அரு மருந்நாக, பிறவிப்பிணி தீர்த்து பிறவாமை அருளும் மாதவன் தவ மருந்தாக உள்ளது. அறிவை மிளிரச் செய்யும் **இம்** மருந்தை அருந்தி, வேத வாழ்க்கை எனும் வரமாகிய **அவ்** அறிவு அனுபவத்தைப் பெற்ற மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

னம் கையில் னாம் ஒரு மருந்நு கொண்டு வந்நிருக்கிறோம். அது அருமருந்நு – வேதமருந்நு – சிவமருந்நு - எமன் அணுகாச் செல்வமருந்நு - ஜீவப்பிணி னீக்கும் தவமருந்நு - மாதவன் தவமருந்நு - சிவமாதவன், பிரம்ம மாதவன், கயிலை மாதவன் மருந்நு. அதை வாங்ஙி உண்டவர்களுக்கு பிறவிப்பிணி னிச்சயம் தீரும் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கௌதம்::*

**னட்ட கல்லை தெய்வம் என்று னாலு புட்பம் சாத்தியே**
**சுற்றி வந்நு மொண மொணென்று சொல்லு மந்நிரம் ஏதடா?**
**னட்ட கல்லும் பேசுமோ னாதன் உள்ளிருக்கையில் ... (சிவவாக்கியர்)**

அசலான இறைவனைத் தேடாமல், னகல் சடங்ஙுகளில் உழன்று, பொய் வேடதாரிகளிடம் மக்கள் ஏமாறுகிறார்கள், அப்படி ஏமாறாமல் ஒரு மெய்க்குருவின் பெருங்ஙருணையால் அவர் அருளிய அறிவு னிலையின் அனுபவத்தைப் பெற்று, ஆசானை வெறுக்காமல் மனம் வெறுத்து னின்றால் வேதாந்த திசை னாதவெளி தோன்றுவதுடன் மெய் ஞானத்தையும் வெல்லலாம்.

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்நார்க்(கு) அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது (திருக்குறள்)**



Copyright © AMNA Trust, Chennai 

திருவடியாக, னற்றாளாக, நிஜமான இறைவனாக விளங்கும், தனக்கு உவமை இல்லாதான் தாள் என்பதே, யுகந்நோறும் யுகந்நோறும் வான னாட்டிலிருந்து மனித உரு தாங்கி குருமுகமாக மெய்ஆசானாக வருகிறார்கள். அவர்களின் வாய்மைக்குள் ஆனவர்களுக்கே மனக் கவலையை மாற்றிக் கொள்வது எளிதாகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:*

அண்ட சராசரங்களையும், மனிதனையும் படைத்து தனிச் சீதனமாக ஆறாவது அறிவையும் மனிதனுக்கு இறைவன் தந்தது தன்னை அறியவே. எண் சாண் உடலுக்கு பிரதானமான சிரசு போல், வேதத்தின் சிரசாக முடியாக இருப்பதே உடல்-உயிர்-ஆன்மா. இதனை அறிய ஓர் அரிய சோங்காகிய மெய்க்குருவின் அருளால் அகமுகமாகப் பயணிக்க வேண்டும். நமது னாமத்திற்குரிய பொருளை அறியும் போதே நாத வடிவை அறிய முடியும். கங்காளனாகிய குருபிரான் பூசும் கவசத் திருனீறே மந்நிரமாக, சுந்நரமாக, தந்நிரமாக, நம்மைக் காக்கும் கவசமாக உள்ளது என்ற பகிர்வுகளுடனும், தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**12-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**பெருவறம் தாங்கித் துறவறம் பாய்ந்நு...** என்ற முரீதுச் சுருக்கம் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் பழனிவேல்:* தந்தையின் எண்ணத்தில் தொடங்கி ஒரு புள்ளியிலிருந்து விரிந்து பஞ்சபூத துணையால் உண்டானதே இத்தேகம். ஆசான் அருளால் மீண்டும் அப்புள்ளியில் சென்று அடங்கும் பிரம்மவித்தை செயலே அடக்கம். இதனைப் பழகும் கல்வியே இல்மு எனும் மெய்க்கல்வி. ஜீவன் இருக்கும் தலத்திற்கு சென்று வருவதே ஜீவப்பிரயாணம். ஜீவனை அறிந்தவர்களே ஜீவாத்மா. ஜீவனை அறிய வைக்கும் ஆசானின் வாய்மையே ஆலவாய் ஊற்றாக, பரிசுத்த ஆவியாக, அளக்க இயலாத ஆகாயமாக உள்ளது. வினை அறுபடாமல் உயிர் பிரிவதே சாவு. ஒரு னரனின் இறப்பே மனுவின் பிறப்பிடம். ஆசான் நம்மேல் வைப்பதே னிஜமான அன்பு. அவர்கள் நம் மனதை னிலை னிறுத்த பழகி வைக்கும் செயலே அறம். இதையே **அறம் செய்ய விரும்பு** என ஔவையார் அருளியுள்ளார். பிறவிப் பெருங்கடல் னீந்திக் கரையேற உறுதுணையாக விளங்கும் ஆசானே அறவாழி அந்நணர். இதனை,

**அந்நஅறம் செய்கானில்**
**அசைந்நனாதத் துந்நுமியின்**
**எழுந்நசையு னாதமதில்**
**இருந்நஜபா வைக்கலக்கும்**
**சன்னதப் பூமியுள்ள**
**சான்றோரெல் லாமறிவார்...** **(ஊழித் தீர்ப்புக் கன்னி)**

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

நமது எண்ணங்கள் கீழ்னோக்காக செல்லாமல் ஆசான் அருளால் மனம் அலையாமல் மேல்னோக்குடன் இருப்பதே பிறவிச் சூழலிலிருந்து விடுபடுவதற்கான வழியாகும்.

*எவருக்கு அறியப்பட்டது அவனுக்கு இஷ்டமுள்ளதாமோ, எவருக்கு இஷ்டமற்றது அவன் அறிகிறதில்லையோ, அத்தன்மைய அன்னிய இருப்பு இல்லாதிருக்கும் ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 



*ஜீவசகோதரி பத்மா:* **நாத விந்துக லாதீ நமோநம ...** என அருணகிரிநாதரும், **விந்நதனில் னாதம்னின்று விளங்நுனிலை...** என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். இறைவன் னாத வடிவானவன். விந்து தேகமாகவும் னாதம் அமானிதமெனும் ஆறாவது அறிவாகவும் ஐம்புலன்கள் வழியாக இயங்குவதாகவும் உள்ளது. விந்ததனில் னாதம் சூட்சும பொருளாக உள்ளது. விந்தெனும் புள்ளியை உருவாக்கும் கோடாகிய னாதத்தை அறிந்தவரே கோடு கண்ட துவாரகாள். இறைவனை அறியும் னாத உணர்வு மனிதனிடத்தில் அன்றி மற்ற ஆற்றல் மிக்க ஜீவபேதங்களிடம் இல்லை.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* புற உலகில் பயணத்திற்கு நாம் செய்யும் எல்லா ஏற்பாடுகளிலும் முக்கிய பங்கு வகிக்கும் காலம் சந்திர சூரியனுக்கு உட்பட்டது. சந்திரன் 27 நாட்களும், புதன் 88 நாட்களும், வெள்ளி 225 நாட்களும், பூமி 365.25 நாட்களும், செவ்வாய் 687 நாட்களும், வியாழன் 12 ஆண்டுகளும், சனி 29 ஆண்டுகளும், நெப்டியூன் 165 ஆண்டுகளும் சூரியனைச் சுற்றிவரும் காலமாகும். தேகம் எடுக்கும் முன் நாம் எங்கிருந்து எப்படி பயணித்து தேகம் எடுத்தோம் என்பதை **விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு...** என்ற பாடலில் திருமூலர்பிரான் அருளியுள்ளார். இதையே வள்ளல் பிரான், தந்தையின் நினைவில் அக்னியாகி பின்னர் ஜல வடிவாக தாயின் கருவறை புகுந்து, அங்கு அறு கோடியே எண்ணாறு லட்சம் கணப்பொழுது தங்கியிருந்த தருவாயில்,
அருவருப்பு, துர்கந்தம், விரோத தத்துவங்கள், துரிசுகள் போன்ற தடைகள் வாராதபடி இறைவன் நம்மை காத்து இரட்சிப்பதைக் கூறுகிறார். மேலும் தனது ஆறாம் திருமுறை சத்திய சிறு விண்ணப்பத்தில் ஒன்று முதல் ஐயறிவு வரையுள்ள ஜீவபேதப் பிறப்பில் நாம் பிறந்து இறந்து படும் அவஸ்தைகள் பற்றியும் கூறியுள்ளார். அப்பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பு, அச்சம், களைப்பு, துன்பம் களைந்து ஆறறிவுள்ள உயர்வுடைய மனித தேகம் பெற்று அதையே நித்திய தேகமாக்கி பேரின்ப சித்திப் பெருவாழ்வு பெறுவதற்கான பயணமே மெய்யான னித்திய பயணம்.

*ஜீவசகோதரர் மாதவன்:* **கோடாயிதக்கூர் வாக்கியம் எண்: 132**
ஒருவனைப் படைத்த இந்திரியம் வெளியாகி இறந்தவன் செத்தவன் என்றும், இறுதி தருவாயில் இந்திரியம் வெளியாகாமல் அடக்கம் ஆனவன் சுவர்க்க லோக வித்தாக விளங்கக் கூடிய சாகாவரம் பெற்றவன் என்றும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இந்திரியத்தால் உண்டான அனைத்து பிறப்புகளிலும், விந்து நாதமும் கலந்த ஆறறிவுப் பிறப்பே மானிடப் பிறப்பு. இவர்களே மெய்ஆசான் அருளால் சுவர்க்க லோக வித்தாக விளங்கக் கூடிய சாகாவரம் பெற்றவர்கள்.

**குருபிரான் அருளமுதம்:** வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய். வினை முதல்வனாக இருப்பது மனம். மனதை உண்டாக்கும் எண்ணமும் நான் என்பதும் ஒன்றே. நான், அறிவு, எண்ணம், மனம், உள்ளம், நினைவு, ஆன்மா, சிவம் யாவும் வித்தில்லா வித்தாகிய ஒரு பொருளே. **உயிலாகிய சாசனத்தை அவரவரின் தலைகளுக்கு உரிமையாக்கி வைப்பதே மங்களாசாசனம்.** தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் அருளால் இதை உணர்ந்தவர்களாக உள்ளனர் என அருளி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**16-02-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**அயி னெனும் பொறுப்பின் அங்ஙனோர் கூற்றும்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவையின் நிகழ்வுகள் உதயமாயின.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் 101:** சீடர்கள், தங்களின் வாக்கால், செயலால் யாருக்கும் எம்மை நேர் பகையாக்கி விடக்கூடாது என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

பேரிரக்கம் கொண்ட காருண்ய மூர்த்தியின் இத்திருவாக்கியம், இன்றளவிலும் அமலில் உள்ள விஷயமாகும். மெய்யை உணர்ந்த மக்கள் மெய் உணர்வை தூண்டும் இரக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதை வள்ளல்பெருமானும், **ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன்** என்கிறார்கள். அழிந்திடா சூக்குமத்துள் அடங்கிப் பார்க்கப் பார்க்க அறிவு விளக்கம் பெற்று மெய் அனுபவத்தினால் மெய் வீட்டினுள் நாம் நுழையலாம். இதனை அடைவதற்கு விழுப்பம் தரும் ஒழுக்கம் வேண்டும். கெட்ட மக்களாக இருந்த நாம் ஆசான் சொல் கேட்டதால் கெட்டதை விட்டு கேட்ட மக்களாக ஆகிக் கொண்டோம்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **அளவிலா வெகு காலமிப் பூமியில்... (குரு ஸ்தோத்திரம்)**

புல் பூமி தோன்றிய காலம் முதல் இருக்கும் குருவே புராதனர். மேல முச்சந்தி சென்று காலம் அறிந்து இருகாலைப் பிடிக்க இந்திரலோகம் தெரியுது பார். இதனை பூமி அடங்கலுக்கும் ஓதும் புராதனம் கூறுவதாக மெய்வழி ஆண்டவர்கள் அருள்கிறார்கள். எக்காலத்தும் அசலை விட்டுப் பிரியாத நிழல் போல் இருந்து, குருபிரான் நம் அறியாமை அகற்றி அறிவு வடிவாக ஆக்குகிறார்கள்.

**குருபிரான் அருளமுதம் :** தான் யார் என அறிந்து உணர்ந்தவன் மனு. மனுமுளை துவங்கிய காலம் முதல் உள்ள மெய்மையே என்றும் பிரகாசப் பொருளாக உள்ளது.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து :*

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார் (திருக்குறள்)**

ஐம்புல நுகர்வில் வாழ்பவர்களின் பேரறிவு, மனதின் அடிமையாகி எமன் கைவசப்படுகிறது. இவர்களது வாயில் நாயும், செவியில் விஷப்பாம்பும், ஈயணைந்திடும் கண் இபுலீசன் வீடாக இருப்பதாக, மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். **ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனை சுட்டறுத்து தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்** என பத்திரகிரியார் அருளுகிறார்கள். அவித்த வித்து முளைக்காதது போல் அறியாமையை பொறிவாயினில் அவிக்க வேண்டும். நீடு வாழும் இடமான நினைவெனும் ஆகாயத்தில் குடியேறிப் பழகி, புலன் வழி போக்கிய வயதை குருவின் திருவருளால் மீட்கலாம்.

**குருபிரான் அருளமுதம்:**

**ஐம்பொறி யெனச்சொல்வார் வாயில் - அத்தை**
**யறியார்கள் மெய்ப்பொறி யானசஞ் ஞீவி**

அவரவர் நாமமாக விளங்கும் அழியாப் பொருளான சஞ்ஞீவி எனும் சிரஞ்ஞீவியை பெற புலனடக்கம், மன அடக்கம் தேவை. நம் சுருதி, யுக்தி, முயற்சியால் கற்ற யாவும் அறியாமை



Copyright © AMNA Trust, Chennai 

எனும் பேதமையே என வேதங்கள் சொல்கின்றன. சிறப்பெனும் செம்பொருள் காணும் போதே பேதமை அகல்கிறது. அறிவை அறியும் அறிவைப் பெறுவதுவே தீட்சை.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்** என திருவள்ளுவரும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர்** பாடல்: **பைம்பொற் சிலம்பணிந்து பாடகக்கால் மேல் தூக்கி...** சிலப்பதிகாரத்தில் பொற் சிலம்பணிந்த கண்ணகி, மதுரையை எரித்த சம்பவம் உணர்த்துவது, சிலம்பொலியான ஆசானின் திரு வாக்காகிய தீ நம் அறியாமையை எரிப்பதாகும். நடனமாடும் நடராஜ தத்துவமும் இதுவே. மெய் ஆசானின் இரக்கத்தால் அகமியக் காலறிந்தால், ஃ எனும் அறிவுக்கண் ரகசியம் அறியலாம். **செம்பொருள் கலையுடுத்தி** என்பது குருவருளால் ஜீவனை அறிவதற்காக சேல் விழியில் மை தீட்டும் ரகசியமாகும். அழியாத நித்தியப் பொருளை அகக்கண் கொண்டு காண பத்து வயதான கன்னித்தாயின் அருள் வேண்டும்.

**குருபிரான் அருளமுதம்:**

**உண்டுறங்கும் ஊனக்கண்கா**
**ணாதபஞ்ஞாட் சரமே**
**உள்ஞானக் கண்கொண்டது**
**காணும்பஞ்ஞாட் சரமே**

ஃ எனும் பிரம்மத்தின் அருளொளிப் பெருக்கு இன்னதென அறிந்த ஒருவரே, அழியாத மூன்றாவது கண்ணை அஞ்ஞன சலாகையால் திறக்கும் வல்லபம் பெற்றவர்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **அருட்பெருஞ்ஜோதி அகவல் :**

**ஆகம முடிமேல் ஆரண முடிமேல்**
**ஆகநின் றோங்கிய வருட்பெருஞ் ஜோதி**

ஆரணம் என்ற வேதத்தின் அகமியத்தை அறிவிப்பது ஆகமம். **ஆகமபு ராணகலை வேதமோதும் னாமமெலாம் அன்னவருக் கேதகுவதால்** என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சர்வ வேதங்களும் ஓதும் இறைவனின் அழியாத நாமத்தை அறிவதே அருட்பெருஞ்ஜோதி. சொல்படு பொருளில்லா இறைவனுக்கே சர்வ நாமங்களும், அகமியம் அறிந்த பெரியோரின் ஜீவகாருண்யமே ஆரணம் அறியவைக்கும் மோட்ச வீட்டின் திறவுகோல் என்கிறார் வள்ளல் பெருமான். ஆகம முடி, ஆரண முடி எனும் வேதமுடியான, உரு, அரு, அருவுரு என்ற ஜீவனின் ரகசியமே அலிப்-லாம்-மீம். இதை அம்பலமாக்குவதே அருட்பெருஞ்ஜோதி.

**குருபிரான் அருளமுதம்:**

அருட்பெருஞ்ஜோதி அகவல் எனும் அழைப்பானது, பொய்கல்வியால் நாம் பெற்ற ஆணவம், அறியாமை விலகி, அறிவின் உண்மை சொரூபத்தை காண வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்கே.

**அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம் :**

**விளங்கும் எந்நன் ஞானசபை மலர்ந்நு ஓங்ங...** இது மெய்யறிவு பெற்ற வேதகுல மைந்தராகிய மேன் மக்களுக்கான மேல்நிலை வைப்பாகும். உலகில் புழக்கத்தில் இல்லாத பேச்சாகிய இதனைப் புரிந்து கொள்ளவும், விரித்துரைத்த வித்தின் லக்ஷணத்தை திறந்து பார்க்கவும் மதி அதிகம் வேண்டும். நிதியம், காலம், வித்தை, கலை என்பதை கண், காது, மூக்கு, வாய் நான்கின் மூலமாக அறிவதே வித்து. பரிசீலனைக்கு எட்டாத மூலமாகிய வித்தில்லா வித்து பற்றி அகந்துலங்க அறிந்திட ஆசான் அருள் வேண்டும் என அருளி, தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**18-02-2023 ~ சனிக்கிழமை ~ சிவராத்திரி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**கயிலை னாதன்க திசிவன் ராவென்றும்**
**லயிலத் துல்கதி ரினல ராவென்றும்**
**இயல்வை குண்டேகா தேசியின் ராவென்றும்**
**பயிலும் சாலைகை வந்துப லித்ததே.**

என்ற **னல்ல னாட் பிறப்பு** திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

- கயிலை னாதராகிய குருபிரானின் அருளால் மெய்ப்பொருள் விடியும் திருனாளே சிவராத்திரி.
- சாகாக் கல்வி கற்று சர்வ வேதங்களின் உட்பொருள் ஆதார உயிர் பதிப்பை உணரும் னாளே சிவராத்திரி.
- தன் பெரு வெளியாகிய சாலையில் சாகாக்கலை பயின்று விராட்பதி தலைவனை தன்னுள் அறியும் னாளே சிவராத்திரி.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - திருவாக்கியம் எண் -120 :**
**உள்ளது னூறே யாண்டி லிளமையி லீராறு போகும்... (ஞான முறையீடு)**

பாவம் என்பது உன் மூச்சு துண்டாடப்பட்டு னஷ்டமடைவது. புண்ணிய உருவாக வரும் ஆசானின் கருணையால் மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்ற பிறகே, பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை நாம் அனுதினமும் அனுபவித்து கொண்டிருப்பதை உணர்கிறோம். ஆசான் சொற்படி கேட்டு மெய்ப்பாதையில் நடந்தால் ஊனமாகிய பாவம் தீர்ந்து புண்ணியமாகிய பேரின்ப வடிவம் கிட்டும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சிவராத்திரி சிறப்புகள் -** மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தி தினத்தில் வருவது சிவராத்திரி. ராத்திரி என்பது இரவாகிய இருளைக் குறிப்பது. அறிவைப் பெறாதவர்களுக்கு இருள் என்பது அறியாமைக்குரிய உறக்க நாடகமாகவும், அறிவைப் பெற்றவர்களுக்கு விழிப்புலகாகவும் உள்ளது. **உறக்க மணுகாப் பெருவா - னோசை வீசும் உள்ளகத்தி லேழெக்காளம் ஒலிப்பதின் னேர்** தவ புருஷரின் னாதம் மூலம் தரணியில் இல்லாத தனிச் செயற்பதி எனும் உறங்கா நெறி விழிப்புலகில் குடியேறும் னாளே சிவராத்திரி.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத்கீதை - சாங்கிய யோகம்:** சர்வமும் கிருஷ்ணார்ப்பணம் என்பதே சாங்கிய யோகமாகும். கோழைத்தனத்தினால் சீரழிந்த சுபாவம் கொண்டவனும், தர்ம விஷயத்தில் குழம்பிய மனதுடையவனுமான எனக்கு அறிவுரை கூறுங்கள் என அர்ஜுனன் பகவானிடம் சரணாகதி அடைகிறான். புற உலக இன்பத்தால், தன்னறிவில் சாய்ந்து குழப்பமுற்றிருக்கும் சீடனை, குருபிரான் பேரிரக்கம் கொண்டு சரி என ஏற்றுக்கொள்வதே சரிதை (சரியை). அதன்பின் வேதசாட்சிகளின் படி உபதேசித்து கிரியை கட்டளைகளின் படி யோகத்தில் பழகச் செய்கிறார்கள். ஆசானே கதி என சரணடையும் சீடனை இறுதி பரியந்தம் வரை ஞானத்தில் னிலைக்கச் செய்து சாங்கிய யோகத்தில் ஸ்திரப்படுத்துகிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்: மயானக் கொள்ளை** - ஏதுமிலாத பரவெளியில் சஞ்ஜீவி மூலிகை கொண்டு மாண்ட மனுவை மண்ணிலிருந்து எழுப்பும் சிவகுரு வரதரின் தேவத்திருச்செயல் இரகசியமே மயானக் கொள்ளையாகும்.



Copyright © AMNA Trust, Chennai

**அமுதகலைக் ஞான போதம் - இரண்டாம் காண்டம் :**

**பரிசீலனைக் கெட்டுவதே வித்தத தாகும்**
**பரீச்சிக்க வொண்ணாத தொரு மூலமுண்டு...**

முத்தி வித்தான முதற்கொழுந்தாக வரும் ஆசானின் திருஆலவாயிலிருந்து பிறங்கும் தெய்வீக விளக்கத்தின் மூலமே பரீச்சிக்க முடியாத வித்தில்லா வித்தின் இரகசியத்தை அறிய முடியும். அவ்வித்து மனிதனின் எண்ணத்தின் பிற்புறப் பிடரியில் னிறை னீதியாசன பீடமிட்டிருக்கிறது என்ற பெருனிலை வைப்பை குருமுகமாக பழகித் தேர்வதன் மூலமே உணர முடியும்.

**ஓமென்ற மரமிதற்கு பணர்களுண்டு**
**உற்ற தளிரிலை பூங்ஙாய் பழங்ஙளுண்டு...**

கற்பகத் தருவின் இரகசியத்தை ஆதி மான்மியத்தில், *சொற்கடங்ஙா வளஞ் துரந்து அமிழாச் செழிப்பேறி வளர்ந்து கேட்டதெல்லாம் தருவதாயும் கேளாததும் தருகுவதான சர்வ ஜீவ மூல மந்நிரார்த்த கற்பகத் தருவெனும் ஓர் விருட்ச வித்தொன்றிருக்கிறது* என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, அறிவாகார சொரூபரின் அருளமுதமே ஓம் எனும் உணர்வளித்து தளிர், இலை, பூ, காய், பழம் எனும் பரிணாமங்களில் மேலோங்க வைத்து உணர்வு உகார ரகிதமாக, கற்பகத்தருவாக ஓரறிவாக விளங்கச் செய்கிறது.

**ஓரறிவாய் விளங்ஙும் தெய்வம் தான் தானாகி**
**ஓசைஒளி அனைத்தும் அது பொதிந்நதாகும்...**

தெய்வத் தனிப்பிரானின் ஓசை கொண்ட னடனமே ஏழ்னிலைக் கம்பமாகிய அமானிதத்தின் அரும்பெரும் னிலைகளையும், இருட்கோல வடிவமாகிய ஜீவகோளத்தின் இரகசியத்தையும் வெளியாக்குகிறது. முரீதுச் சுருக்கத்தில், **இந்ரஜாலத்தினால் வந்ந வுருவினி லந்நக் கருனாதம்...** என்ற திருப்பாடலின்படி, பேரறிவாய் முகச்சாயை எண்ணில் கோடியின் பிரம்மாண்ட னிலைகளை, ஆறறிவும் சேர்த்து ஒன்றாய் விழுங்ஙி தொந்தி புடைத்த கணபதியாய், சூல்முகமாய் வரும் மெய்ஞான சிவகுருபிரானின் செழுஞ்ஶீதள மனோனோக்கிற்கு இணங்ஙியவர்களே இதனை விளங்கி துலங்கிக் கொள்ள முடியும் என்ற ஆசீர்பாத ஒலிவாயுரையுடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**19-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**அங்ஙமதிடத்தில் ஐம்புலக் கதவை...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபெருமான் அருளமுதம்:** ஞானத்தின் ரகசியங்களை உணர்ந்தவர்களே ஞானிகள் என்பதை குருமுகமாக அனுபவம் மூலமே அறிய முடியும். ஜகத சற்குணா லங்ஙிர்த சன்னதராக, அகம் புறம்புங் ஙண்டாண்ட சலாசனராக, யுகங்ஙள் னான்ஙுங் ஙைகொண்ட கோடூழியராக வந்த மகதி ஆண்டவர்களும், இறப்பொழிக்கும் சன்மார்க்கத்தை அருளிய வள்ளல்பிரானும், அறியாமை கடந்து, அழியாமைக்கும் செல்லும் வழியையே மக்களுக்கு அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் மகேஷ்:* **வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்... (குருமணிமாலை)**
ஆறறிவு படைத்த மனிதன் ஓரறிவு மரம் போல் வாழ வேண்டும். நல்ல நிலத்தில் விழுந்த விதை விருட்சமாவது போல், நல்ல மனுவின் உள்ளத்தில் விழுந்த ஆசானின் னாதமாகிய வித்தில்லா வித்து ஞான விருட்சமாகிறது. மனித இயல்பு முடிவற்ற ஆசை கொண்டது.


Copyright © AMNA Trust, Chennai

னித்தியத்தையே னாடும் பேரின்ப வித்தாகிய அதன் முடிவு னித்திய சொர்க்கம் அல்லது னித்திய னரகம். அவத்தில் ஜனித்தவனை தவத்தில் ஜனிக்க வைப்பவரே மெய்க் குருபிரான்.

**வித்தில்லா வித்துவி தைக்கவந்த**
**முத்திவித் தானமு தற்கொழுந்நே... (தெய்வத்தேடு கூடகம்)**

தந்தையின் எண்ணத்தில் உண்டாகி தாயின் கருவறையில் வளரும் கருவை னற்றாளாகிய சாகாத்தலையெனும் இறைவஸ்துவே வளர்க்கின்றது. அமானிதக் கடன் பெற்று வந்த மனிதன், மெய் ஆசானின் பரிசுத்த ஆவியால் வளர்ந்து, மோட்ச வித்தாக விளைந்து, ஞானப் பதத்தை அடைவதற்கான வழி மெய்வணக்கமே.

*ஜீவசகோதரி புன்னகை:*
**கோடிமனுக் கீந்நாலும் குறையாதென் சிமிழியின்மை... (தௌஹீது காமீல்)**
உலகில் அனித்திய இன்பம் அனுபவித்து சலித்து, நம் வயது வாழ்நாள் எல்லாம் வீணாக்குகிறோம். ஆசான் அருளிய ஆருயிரின் னிலைப்பிடமே, இன்ப வடிவமாக இருக்கிறது. எண்ணாயிரம் கற்ப காலம் யோகம் இருந்நாலும் சலிக்காத இன்ப னாட்டிற்கு நம்மை அழைத்துச் செல்வது ஆசானின் நாதமே. அறிவு இன்னதென அறிவிக்கும் குருமொழியாகிய இயல் மொழியெனும் வாய்மைக்குள் நாம் ஆகிக் கொள்ள வேண்டும்.

**என்னமோ வென்று வும்மை**
**யெண்ணிவிட் டிருந்நே னின்னாள்**
**அண்ணலே அரசே அன்பே**
**அருங்ஙுல விளக்கே னாதா...**

அறியாமை எனும் கசடுகளை அகற்றி ஆகாய கங்கையாகிய தனது இருளறு மொழியெனும் அருளமுதத்தால் நம்மை முக்தி வீடடையச் செய்பவரே அண்ணல். நம் எண்ணம், சொல், செயல் யாவும் ஒர்மைக்குள் ஆகும் செயல் நிகழுமிடமாக ஆதி மார்க்க னீதி அவை திகழ்கிறது.

*ஜீவசகோதரர் கவனமணி:* ஞானத்தின் எல்லையை அடைந்தவர்களே **கோடி கடந்த விராட்குரு** என வேதம் கூறுகிறது. அறிவாகிய அமானிதம் சுமந்து வரும் மனுத்தலையின் தரத்தை உணர்த்தவே பெரியோர்கள் யுகந்தோறும் வருகிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* ஞானசூரியனாக பெரியோர்கள் வருகையில் அதற்குரிய மலர்கள் மலர்கின்றன. அவர்கள் ஒருவருக்காகவே இவ்வுலகம் இயங்குகிறது. தன்னைப் போன்றே ஒவ்வொரு ஜீவனையும் பார்க்கும் அவர்கள், தன்னையறியும் தவமுறையை நமக்கு இனாமாக வழங்குகிறார்கள். ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் கயிலாயம் சென்று வரும் பாக்கியம் பெற்றவர்களாக இருப்பது சத்தியமே என்ற பகிர்வுகளுடனும், தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**21-02-2023 ~ செவ்வாய்க்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

**அகர முதல் அவ்வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** என்ற திருக்குறளுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* உலகை சூழ்ந்து இருக்கும் இருளை விட்டு, ஜீவஒளியில் திளைக்கும் ஞானசெம்மல்கள் அனுபவத்தில் கண்ட உண்மையே வேதமாகிய மறை. நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் மறை பொருளான இறைவனை அறிவதற்கான வழியை வாழையடி



Copyright © AMNA Trust, Chennai 

வாழையாக வரும் குருபிரான் தங்களின் ஓரிதழ் தாமரை கொண்டு அறிய வைக்கிறார்கள். அரிதிலும் அரிதான அழியாத மெய்ப்பொருளை, கிடைக்கும் போது பெற்றுக் கொள்ளும் செயலையே **காத்து உள்ளபோதே தூற்றிக் கொள்** என கூறப்பெற்றுள்ளது. மெய்பாரவான்கள் அறிவான வார்த்தைகள் மூலம் நம்மிடத்தில் னித்திய இன்பம் இருக்கும் இடத்தில் நம்மை தங்க வைக்கிறார்கள். குருபிரான் அருளால் னரனிலிருந்து மனுவாக தேவனாக மாறி, சத்திய மேடையில் அமர்ந்து அந்தர்முகமாக, அன்னம் மயில் வாசி என்ற குதிரை வாகனத்தில், பிரம்மத்தை னோக்கிச் செல்லும் பிரம்மச்சாரியின் செயல், ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு செயல் அனுபவமாக உள்ளது.

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

**தரைதனில் னரராய்த் தோன்றித்**
**தாம்கெதி அடையா தோரை**
**முறைசங்நா ரனுக்கி ரகம்**
**முடித்துமே மனுவாய் மாற்றி...**

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, சிறிய வித்தினுள் இருக்கும் பெரிய விருக்ஷம் போல், மனுவினுள் இருந்து அளவற்ற பேரின்ப வாழ்வுக்கான ஆசையை உண்டாக்கும் நித்திய வித்தின் உன்னதம் அறியாத மனு, அதனை அனித்திய உலக வாழ்விற்கே செலவிட்டு இறுதியில் எமன் கையில் சிக்கி இறக்கிறான். புதிய ஒலி-ஒளி மூலமாக புதுயுகம் படைக்கும் பெரிய செயலின் அரிய பலனைப் பெறவேண்டி, இங்கு குருபிரானின் கையகத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு மனுத்தலையும் அன்னாட்டுக்குரிய மகா உன்னதமான வித்தாக உள்ளது. ஒவ்வொரு கணப்பொழுதும் மரணத்தின் பிடியில் சிக்கி இருப்பதை அறியாத மனுவை, கருணையே வடிவாகத் திகழும் குருபிரான் தங்களின் அருளமுதத்தால் அதிலிருந்து விடுவித்து எக்கோடி காலத்திற்கும் வாழ்வாங்கு வாழ்வு வாழ வைக்கிறார்கள் என்கிற பகிர்தலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**26-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

*ஜீவசகோதரர் கௌதம்: துக்க னிவர்த்தி சுகப்ராப்தி* - அறியாமையால் நிகழும் அழிவிற்கான செயலே துக்கம். அறியாமைக்குள் இருக்கும் அறிவான பொருளை அறிந்தடைவதே னித்திய சுகம். னித்திய சுக வாழ்வு பெற வந்த மனு, உலக இன்பங்களால் தன் கடமையை மறந்து விட்டான். அரிய பிறப்பான மனு, இறைவனிடம் தான் பெற்று வந்த கடன் இன்னதென உணர்த்தும் உத்தமர் திருவடி பணிந்து, அமானிதம் எனும் அறிவின் வழி வாழும் மெய்வழி வாழ்வே நித்திய சுகவாழ்வாகும். யாரும் கட்ட முடியாத நம் தேகமாகிய திருமாளிகையின் தலைவாசல் திறப்பித்து, சுத்தத் திருவடி தொழுதிடும் வழியறிவித்து பிறவாமை எனும் பெருனிலை வைப்பை னம் தலையில் ஏற்றி வைக்கும் தேடரிய வேதியரே குருகொண்டல்.

நெடுங்கால வாழ்வுக்கென வீடு கட்டும் மனு அறியாமையால் தன்னுள் இருக்கும் அழிவிலா நித்திய வீட்டினை அறியாமல் வீணாக்குவது தன்னுடைய வயதும், வாழ் நாளும்தான். அப்படி வீணதுவாகிடாமல் மேலவரிடத்தில் சார்ந்தால், மெய்வழி என்ற மேலான

*எது ஒன்றும் காரணரூபமா யிருப்பதற்கு யாது காரியவடிவமாய் விளங்குகின்றதோ, அத்தன்மைய காரிய காரண வடிவமான ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

வீட்டில் குடியேறி னித்திய வாழ்வு வாழலாம். **வீடு கண்டெடுக்க பாடு னற்பலனே (அறிவு அறி பாடம்)** மெய்யான வழியில் மெய்க்கல்வி பழகி, மெய்யின்பம் அனுபவிக்கும், மெய்யான வீடு அடைவதற்கான பாடே வழிபாடு. வீடான வடமேராக விளங்கும் வாலாம்பிகையின் பாத ரகசியத்தை அறிய வைப்பவரே மெய்ஆசான். பூட்டடங்கா சாவி கொண்டு, வீட்டுடை விவரத்தை திறந்து காட்டி அதில் நம்மை குடியேற்றி, ஜீவனைக் கண்டு, அறம் செய்ய அருளும் ஆசானின் அன்பே மெய்யன்பு. பேரறமாகிய தன்னையறியும் தவமுறையில் தலையிட்டு பிறவாப் பேறு பெற்றவர்களே தேவர்கள். **அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை** என வள்ளுவரும் அருளியுள்ளார்.



யுகயுகந்தோறும் மனித வடிவில் வரும் இறைவனின் திருவடி பற்றிக் கொண்டவர்களுக்கு எமபயம் என்பதில்லை. நம்மிடம் காலமும் காலமற்ற இடமுமாக விளங்கும் கோடி சூரியப்பிரகாசத்தை தரிசிக்க வைக்கும் புண்ணிய உருவான குருபெருமான் திருவடி கூடிக் கொள்ளும் நேரமே வசந்த காலம். னீதமெனும் போத மொழியால் னிதம் னித்திய வழியில், வெறுக்காமல் மனம் வெறுத்து னின்றால் வேதாந்த திசை னாத வெளி தோன்றி மெய்ஞானத்தை வெல்லலாம். நாறும் ஓர் மாமிசத் துண்டாய் இருந்த நம் இதயத்தை, குரை கடலேழ் அதற்கதிகம் விரியச் செய்த, அருந்தவ மாமுனி நம் அருட்குருவின் திருவடி போற்றி வணங்குவோம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* ஃ எனும் பிரம்மத்து அருளொளிப் பெருக்கால், அமானிதத்தின் சிறப்பை அறிய வைத்து நம் எண்ணம் பல கோடியாக விரிந்திடாமல், ஒண்டி ஒரு மனமாக, னினைவென்னும் ஆகாயத்தில் சொர்க்க பதியில் குடியேற்றி வைத்து அன்பெனும் பிடிக்குள் நம்மை ஆக்கி வைத்த ஆசான் பாதம் பணிவோம் என்ற பகிர்தலுடன் அவை நிறைவுற்றது.

**26-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**அங்கம திடத்தி லைம்புலக் கதவை**
**யடைக்கும்பே ரறிவெனக் கருளி ...**

என்ற குரு மணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் ராஜமகேஷ்:*

**அண்டங்ங ளவனி யானவெப் பொருளு**
**மரியனின் சூலினி லமைத்து ...** **(குருமணிமாலை)**

ஒரு பொருள் என்பது அதன் நிறம், மணம், சுவை, குணம், இடம் கொண்டதாக நமது ஐம்புலன், பொறி கொண்டு உணரக்கூடிய ஒன்றாக, பஞ்சபூதக் கலப்பால், காலத்திற்கு உட்பட்டு அழிந்து, மாறும் தன்மையுடன் உள்ளது. அழியாத னீதியெனும் பொருள் மனிதனிடம் தான் உள்ளது. ஒரு மெய்குருபிரானை அடைந்த பின்பே நம் மனம் சைதன்யமாகி, கலையாகி,



Copyright © AMNA Trust, Chennai 

காட்சியாகி, நிலையாகி, பிரம்மம் ஆகிறது. கோடி சூரிய பிரகாசமான இறைவனை சந்தித்தால் தான் மனம் அத்திருச் சன்னதிக்கு போகும். உலகம் மனோமயமானது என யோக வாசிஷ்டத்தில் கூறப் பெற்றுள்ளது. நமது கற்பனைகள், எண்ணங்கள், தோற்றத்தின் மீது ஆசை எனும் அனைத்தும் மனதின் பதிவுகளே. அசைகின்ற மனதை அசையாமல் ஜீவனாக அறிவாக மாற்றி பழகுவதே பிரம்மவித்தை செயல். ஒரு மெய்குருபிரானிடம் உடல்-பொருள்-ஆவி தத்தம் செய்வதின் மூலமே தன்னைத் தான் அறிவது என்பது சாத்தியம்.

*ஜீவசகோதரர் பழனிக்குமார்:*

**மௌன வைப்பின்வ கைவிரித் தேயெனை... (குருஸ்தோத்திரம்)**

உயிரை அறியாமல் வாழ்வதே புண்பாடு. குருபெருமானின் அமுத வர்ஷிப்பால் நாளின் ரகசியம் அறிந்து காலச்சக்கரம் கைகொண்டு பிரம்மவித்தை பழகி புகழுடம்பு அறிந்து முத்தி எனும் பெருவாழ்வு வாழலாம்.

**திருவடி ஞானம் சிவம் ஆக்கு விக்கும்**
**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே (திருமூலர்)**

அறிவின் மீது போர்த்தி இருக்கும் மாயத்திரையை குருபெருமான் இரக்கத்தால் விலக்கி, ஜீவன் அலையாமல் பாதுகாத்து, அறம் செய்து பொருளாகிய வாக்கு கொண்டு பேரின்பமாகிய வீடடையலாம். எழுவகை தோற்றத்தில் னரனாய் இருந்த நம்மை மனுவாக மாற்றி தேவனாக ஆக்கும் பெரிய செயலே ஆம் என்ற பெருவாழ்வு. இதனை **அனுபவத்தால் அறிக** என்கிறார் வள்ளலார். நம் கலியை மாற்றவே அவதாரம் நிகழ்கின்றது. னீதியாக னித்தமும் சொர்க்க னரகம் தீர்ப்பு கொடுத்து, இருதயமிருக்கும் இடம் அறிந்து, ஓர் அறிவாய் நின்று, ஐம்புலனடக்கி, அகத்தில் அஜபா னடனம் பழகி, காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்து, நின்றோர்கள் நிலையறிந்து கொடுக்கும் வள்ளலின் துணையுடன் ஆம் என்ற பெருவாழ்க்கை வாழலாம்.

*ஜீவசகோதரர் பிரபு:* னரனாய் பிறந்த நாம், குருவருளால் மனிதனாக மறுபிறப்பெடுத்து, அவர்களின் மாசற்ற இரக்கத்தால் முறையான வணக்கம் பழகி, வினையகற்றி ஜீவதேகத்தில் குடியேறி வாழலாம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* ஈதல் இசை பட வாழ்தல் போல் அவ்வெனும் ஓரறிவாக னீதியெனும் மெய்ப்பொருளாக, சீராகிய அமானிதம் அறிந்து, குருபெருமானின் அருள் பெற்று ஒழுக்கம், மற்றும் வைராக்கியமுடன், கங்குல் பகலற்ற இடத்தில் வீடடைந்து சிவமாக வாழலாம் என்ற பகிர்தலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

**05-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

குருபிரான் அவர்களின் மேற்பார்வையில் பூரண வண்ணப்பா காப்பு செய்யுள் மற்றும் முதல் இரண்டு பாடல்கள் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

**12-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே**
**ஜீவபண் டிதருள்பண் டிதமே...**

என்ற குரு மணிமாலை தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. பூரண வண்ணப்பாவில் 3 மற்றும் 4 வது பாடல்கள் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**19-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**தன்னே ழின்னபு சின்புற மேவுற...** என்ற பூரணப் புதையல் பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து, பூரண வண்ணப்பாவில் 5 மற்றும் 6வது பாடல்கள் குருபிரானின் வழிகாட்டுதலின் படி தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**26-02-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

தகதிமி தகஜனு என்ற ஜதியோடு தாளம் பயிற்சி அளிக்கப் பெற்று, தொடர்ந்து குருபிரான் மேற்பார்வையில் பூரண வண்ணப்பா பாடல்கள் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

குரு வாழ்க ! குருவே துணை !!

*ஞானசக்தி சமாரூடராய், அதாவது சிற்சத்தியோடு செவ்வையாய்ப் பொருந்நியவராய்த் தத்துவ மாலையினால் அலங்ஙரிக்கப்பெற்றவராய், தம்மை யடைந்நவருக்குப் புத்தி முக்திகளைத் தருபவருமாய் விளங்ஙும் அந்ந ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# 2023 - பிப்ரவரி மாத அவை நிகழ்வுகள்


**01-02-2023 ~ புதன்கிழமை ~ சிறப்பு சபை**
**இடம்: சென்னை**

ஆதி மார்க்க நீதி அவையின் குருகொண்டல் சாலை ரவி அப்பா அவர்கள் திரு முன்பாக நாயகன் இல்லத்தில், ஜீவசகோதரர் ப. சரவணகுமரன் ஜீவப்பிரயாணமான 40 ஆம் நாள் ஆன்ம சஞ்ஞார உரிமைக் காட்சி சிறப்பு சபை நடைபெற்றது.



**24-02-2023 ~ வெள்ளிக்கிழமை**
**இடம்: சிவகாசி**

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள் தாமோதரன் - கலைச்செல்வி அவர்களின் புதல்வன் **செல்வன். D.ஆதர்ஷ்கிருஷ்ணா - செல்வி. M.ஷாலினி** அவர்களின் திருமணம் குருபிரான் முன்னிலையில் சிவகாசியில் சிறப்பாக நடைபெற்றது.



## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **09-04-2023 / சென்னை** | ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் சேர்க்கை. |



Copyright © AMNA Trust, Chennai 

**2023 பிப்ரவரி மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்**

புன்னகை
இன்பலதா
மாதவன்
ஸ்ரீமா
மகிமா
மஞ்சுநாதன்
புனிதா
ராஜமகேஷ்
செல்லம்மா
சபிதா
தனராஜன்
கிருஷ்ணமூர்த்தி
வடிவேலன்
பழனிகுமார்
உமாரணி
ஜெகந்நாதன்
பாஸ்கர்
தியாகராஜன்
கோபிநாத் பழனிவேல்
ஜெய் குமார்
ஜான்சி ராணி
சீனிவாசன். காஞ்சிபுரம்
செந்தில். சிவகாசி
மகேஷ். மதுரை
கார்த்திகேயன். ஆவடி
கார்த்திகேயன். சிவகாசி

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**


Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: message2amna@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

*Twitter Page: https://twitter.com/TrustAmna*

*Instagram: https://www.instagram.com/amnatrust*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Vijaya Shankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 20 - Month: March 2023*